பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 ஆடி 13 சனிக்கிழமை (29 -07 -1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 246

# மணலாறில் ஐந்து முகாம்கள் மீது புலிகள் ஒரே நேரத்தில் தாக்குதல்!

## படையினர் தரப்பிலே பேரிழப்பு 50 க்கு மேல் போராளிகள் வீரச்சாவு

யாழ்ப்பாணம், ஜூலை 29

மணலாறுப் பகுதியில் உள்ள ஐந்து இராணுவ முகாம்கள் மீது நேற்று அதிகாலை விடுதலைப் புலிகள் பெரும் தாக்குதல் தொடுத்தனர்.

கடற்கரையை அண்டிய கொக்குத்தொடுவாய் முகாம், ஜானக புர தலைமை முகாம், வெலிஓயா துருப்புக்கள் விநியோக முகாம், கொக்கிளாய், ஐயசிங்கபுர ஆகிய முகாம்கள் மீதே விடுதலைப் புலிகள் ஒரே சமயத்தில் பாரிய தாக்குதல் தொடுத்தனர்.

அதிகாலை 2 மணி முதல் ஆரம்பித்த தாக்குதல் பல மணி நேரம் நீடித்தது.

இத்தாக்குதல்களில் ஸ்ரீலங்கா படையினர் தரப்பில் பேரிழப்பு ஏற்பட்டிருக்கிறது.

நேற்று இரவு வரை கிடைத்த தகவல்களின்படி— படையினரின் மும்முனைத் தாக்குதல்களுக்கு மத்தியில் இடம்பெற்ற பெரும் சமரில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளைத் தோற்கடிக்கும் வரை சமாதானத் தீர்வு வேண்டாம்!

### சங்கநாயக்கர்கள் ஜனாதிபதியிடம் வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 29

விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்கும் வரை இனப் பிரச்சினைக்கான சமாதானத் தீர்வுத்திட்ட யோசனைகளை வெளியிட வேண்டாம்.

பௌத்த நிக்காயாக்களின் பிரதம சங்கநாயக்க தேரர்கள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிடம் இவ்வாறு கோரியுள்ளனர்.

இது தொடர்பாக மூன்று நிக்காயாக்களின் பிரதம சங்க நாயக்க தேரர்கள் உட்பட முக்கிய 15 பௌத்த தேரர்கள் கையொப்பம் இட்டு ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

நாட்டைப் பிரிப்பதற்காகப்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பச்சிலைப்பள்ளி பகுதியை நோக்கி கடும் ஷெல் வீச்சு

தென்மராட்சி, ஜூலை 29

நேற்றுக் காலை ஆனையிறவு முகாமிலிருந்து பச்சிலைப்பள்ளிப் பகுதியைநோக்கி ஆட்லறி ஷெல் வீச்சு நடத்தப்பட்டது.

ஷெல்கள் தென்னந்தோட்டங்களிலும் பற்றைக் காடுகளிலும் வீழ்ந்து வெடித்ததால் உயிர்ச்சேதம் ஏற்படவில்லை. பல பயன்தரு மரங்கள் முறிந்து வீழ்ந்தன. பெருமளவு மக்கள் இடம்பெயர்ந்தனர்.

பனை சந்தையில் வீழ்ந்த

(6 ஆம் பக்கம் பார்க்க)

## 'ரைம்' சஞ்சிகை தடுத்து வைப்பு

கொழும்பு, ஜூலை 29

அமெரிக்காவில் இருந்து வெளியாகும் பிரபல சர்வதேச சஞ்சிகையான ''ரைம்'' சஞ்சிகையின் பிந்திய இதழ் கொழும்பில் சுங்க அதிகாரிகளினால் தடுத்துவைக்கப்பட்டு தீவிர பரிசீலனையின் பின்னர் விற்பனைக்கு அனுமதிக்கப் பட்டுள்ளது.

அந்த சஞ்சிகையில் வெளியாகிய 'புலிகளின் கர்ச்சனை' என்ற கட்டுரையில் 'முன்னேறிப் பாய்தல்' இராணுவ நடவடிக்கை தொடர்பான தகவல்கள் வெளியாகியுள்ளன.

(ஐ-4)

## அளவெட்டி படையினர் பரவலாக ஷெல் வீச்சு!

### சுன்னாகத்தில் பெண் காயம்

அளவெட்டி பகுதியில் நிலை கொண்டுள்ள படையினர் சுன்னாகம், மல்லாகம், ஏழாலைப் பகுதிகளை நோக்கி நேற்று அதிகாலை முதல் பரவலாக ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

சுன்னாகம் பகுதியில் விழுந்து வெடித்த ஷெல்லினால் பேரின்பநாயகம் நிர்மலா (வயது 35) என்ற பெண் காயமடைந்தார்.

இதேவேளை பலாலி முகாமில் இருந்து யாழ் நகர கரையோரப் பகுதிகள் மீது நேற்று முன்தினம் இரவும் நேற்று அதிகாலையும் ஆட்லறி ஷெல்கள் ஏவப்பட்டன.

(ஐ-13-15)

## வினாத்தாளுடன் 'ஹபரண' இன்று காலை வந்து சேரும்

யாழ்ப்பாணம், ஜூலை 29

நாளை மறுதினம் ஆரம்பமாகவிருக்கும் ஜி. சி. ஈ (உயர்தர) பரீட்சைக்கான முதல் தொகுதி வினாத்தாள்களும், காகிதாதிகளும் இன்று சனிகாலை பருத்தித்துறைக்கு வந்து சேரும் என நேற்று மாலை தெரிவிக்கப்பட்டது.

கொழும்பில் இருந்து விசேட பாதுகாப்புடன் திருகோணமலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட வினாத்தாள்கள் நேற்றுக் காலை அங்கு வைத்து 'ஹபரண' கப்பலில் ஏற்றப் பட்டதாகவும்—

நேற்று மாலை 4 மணிக்கு வடக்கு நோக்கிப் புறப்பட்ட அக்கப்பல் இன்று காலை காங்கேசன்துறையை வந்தடைந்து அங்கிருந்து பின்னர் பருத்தித்துறைக்கு வரும் என்றும்— தெரிவிக்கப்பட்டது.

[ஐ-8-4]

## வடக்கே வரும் கப்பல்களுக்கு செஞ்சிலுவைப் பாதுகாப்பு இன்றுடன் இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், ஜூலை 29

வடபகுதிக்கு வரும் கப்பல்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு இன்று முதல் இடைநிறுத்தவுள்ளது.

ஜி சி. ஈ. உயர்தரப் பரீட்சை வினாத்தாள்களுடன் இன்று காலை பருத்தித்துறைக்கு வரும் என எதிர்பார்க்கப்படும் ''ஹபரண'' கப்பலே செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் பாதுகாப்புடன் வடக்கே வரும் கடைசிக் கப்பலாக இருக்கும் என்று யாழ். செயலக வட்டாரங்கள் நேற்று தெரிவித்தன.

யாழ். மாவட்ட மாணவர்களின் நலன் கருதி வினாத்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கைவிடப்பட்ட ''டிரக்''கினுள் இலங்கையர் பலர் மீட்பு!

### ஜேர்மனியில் சம்பவம்

பொன், ஜூலை 29

ஜேர்மனியின் கிழக்குப்புற நகரம் ஒன்றின் பிரதான வீதியில் கைவிடப்பட்ட நிலையில் நின்ற ''டிரக்'' ஒன்றில் இருந்து இலங்கையர்கள் பலர் மீட்கப்பட்டுள்ளனர்.

சட்டவிரோதமாக நுழைந்தவர்கள் எனக் கருதப்படும் இவர்களை ஜேர்மன் அதிகாரிகள் நேற்று முன்தினம் கண்டு பிடித்தனர்.

''டிரக்'' வண்டியினுள் மிக நெருக்கமாக இவர்கள்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## 25 ஆயிரம் படையினர் மூலம் அடுத்த நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 29

குறைந்தது 25 ஆயிரம் துருப்புக்களைக் கொண்டு யாழ். குடாநாட்டில் பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ள ஸ்ரீலங்கா அரசு உத்தேசித்துள்ளதாகத் தெரியவருகின்றது.

பல முனைகளில் இருந்து இந்த நடவடிக்கை யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்படலாம் எனவும் தெரிவிக்கப் படுகின்றது.

இதன் மூலம் ''முன்னேறி பாய்தல்'' நடவடிக்கையின் மூலம் கைப்பற்றி பின் 'புலிப் பாய்ச்சல்' நடவடிக்கையால் கைவிட்ட பகுதிகளை மீள

(6 ஆம் பக்கம் பார்க்க]

வெளியீட்டு விழா:

நிதர்சனமும், மட்டு–அம்பாறை சிறப்புப் படையணியும் இணைந்து தயாரித்து வழங்கும்

சி. சேரனின் "உறங்காத கண்மணிகள்" (முழுநீளத் திரைப்படம்)

இடம்: ஸ்ரீதர் திரை அரங்கு, யாழ்ப்பாணம் காலம்: 01-08-1995 நேரம்: பிற்பகல் 3-00 மணி

(சி/1959)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்


*விற்பனைக்கு*

நல்லின இறைச்சி சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. S வெலி, உடுவில் மகளிர் கல்லூரிக்கு முன், மல்வம் வீதியூடாக, சிங்கம் வீதி, உடுவில். [37751]

தராசுப்படிகள், இரும்புக் கதிரைகள், கண்ணாடி சோக்கேஸ் முதலியன விற்பனைக்குண்டு. தொடர்பு: தி. கிருஷ்ணராசா, இல. 190, சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம். [37758]

*விசேஷ அன்ரனா*

ரூபவாஹினி, மட்றாஸ் நிகழ்ச்சிகளை பார்ப்பதற்கு விசேஷ T V அன்ரனா பொருத்துதல், பழுதுபார்த்தல் T. V. செட், றேடியோ, மணிக்கூடுகளை திருத்திக் கொள்வதற்கு வீனஸ் டிக்காவாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, கிராண்வி வீதி [ஆரியகுளம் சந்தி], யாழ்ப்பாணம். கிளை: கண்டி வீதி, சாவகச்சேரி. [சி-1687]

*காவேரி சீயாக்காய்*

80 வீதம் சீயாக்காயும் 20 வீதம் ஆறுவகை இயற்கை பொருட்களும் சேர்த்து தயாரிப்பது தான் காவேரி சீயாக்காய் பவுடர் எந்த ஓர் இரசாயன பொருள்களும் [சோடாத்தூள்] சேர்க்காமல் தயாரிக்கப்படுவது தான் காவேரி சீயாக்காய் பவுடர். ஒரு முறை வாங்கிப் பாவியுங்கள் உண்மை விளங்கும். [37689]

*மணப்பெண்கள் தேவை*

பிரான்சால், சவுதியால் வந்த 29, 32 வயதானவர்களுக்கும், 33 வயது நியூசிலாந்து டாக்டருக்கும், குற்றமுள்ள சைவ போசன 29 வயது எக்கவுண்டனுக்கும், 34 வயது டாக்டருக்கும் தேவை. மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். [37763]


# அமைதிக்காக உழைப்பவர்களை இலங்கை அரசு தூக்கி எறிகிறது

## நாடு கடத்தப்பட்ட அமெரிக்க பிரஜை தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 29

சமாதானத்துக்காக — அமைதிக்காக உழைத்தவர்களைத் தூக்கி எறியும் இலங்கை அரசு மக்களின் நலனுக்காகப் பாடுபடுவதாக எப்படிக் கூறிக் கொள்ளமுடியும்?

— இவ்வாறு தெரிவித்தார் தேசிய கிறிஸ்தவ மன்றத்தைச் சேர்ந்த அமெரிக்கரான கெனத் மக்டோன்.

நாட்டின் உள்விவகாரங்களில் அநாவசியமான முறையில் தலையிட்டார் என்ற குற்றச்சாட்டின் பேரில் இவர் நேற்று கொழும்பில் இருந்து நாடு கடத்தப்பட்டார்.

நாடு கடத்தப்படுவதற்கு முன் செய்தியாளர் மத்தியில் கருத்து தெரிவித்தபோதே அவர் முன்கண்டவாறு கேள்வி எழுப்பினார்.

இலங்கையில் தங்கியிருந்த பதினொரு மாத காலத்தில் மக்கள் மத்தியில் அமைதியை ஏற்படுத்தும் போதனைகளையே நடத்தினேன். சமாதானத்தை நாடிய மக்கள் மீது காட்டிய பரிவே நான் இழைத்த ஒரேயொரு குற்றமாகும் என்றும் கெனத் மக்டோன் தெரிவித்தார். (ஐ-3)


**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.**

வட இலங்கை மருத்துவக் கல்லூரியிலிருந்து யாழ். பல்கலைக்கழகத்திற்கு மருத்துவக் கற்கை நெறி பயில அனுமதி கிடைக்கப் பெற்ற 37 மாணவர்களும் தமக்குரிய அனுமதிக் கடிதங்களை பரீட்சைகளும் அனுமதிகளும் கிளை, யாழ். பல்கலைக்கழகத்திலிருந்து பெற்று தமது பதிவை 1995 – 08 – 31 இற்கு முன்பாக மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பெயர்ப்பட்டியல் பரீட்சைகளும் அனுமதிகளும் கிளை அறிவித்தல் பலகையில் போடப்பட்டிருக்கின்றன.

பதிவாளர்.

[சி-1963]


## பட்டமளிப்பு விழா ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 29

யாழ். பல்கலைக்கழகத்தின் பொதுப் பட்டமளிப்பு விழா செப்ரெம்பர் 16 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பட்டமளிப்பு விழாவை இன்று சனிக்கிழமை நடத்துவதற்கு முன்னர் தீர்மானிக்கப்பட்டது தெரிந்ததே. (இ)

## மாணவர் மேலதிக உணவு முத்திரை

யாழ்ப்பாணம், ஜூலை 29

நல்லூர் ப.நோ.கூ. சங்கத்தால் இடை நிறுத்தப்பட்ட மாணவர்களுக்கான மேலதிக உணவு முத்திரையின் 6 ஆம் இலக்க புள்ளிக்கான பொருள் விநியோகம் இம் மாதம் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. [இ]

# புத்தளம் புலிகளின் முக்கிய இடமாம்

## பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல்

கொழும்பு, ஜூலை 29

தடை செய்யப்பட்ட பொருள்களை வாங்கிச் செல்வதற்கான முக்கிய இடமாக புத்தளத்தை விடுதலைப் புலிகள் பயன்படுத்துவதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

3 ஆம் ஈழப்போர் தொடங்கியது முதல், இப்பாதையூடாகவே வடபகுதிக்கான பொருள்கள் எடுத்துச் செல்லப் படுகின்றன.

வில்பத்து காட்டு மார்க்கமும், கற்பிட்டி கடல் மார்க்கமும், இந்நடவடிக்கைக்காகப் பயன்படுத்தப்படுகின்றன.

கடந்த சில மாதங்களாகவே, இந்த மார்க்கங்களின் ஊடாக பெருந்தொகையான, தடை செய்யப்பட்ட பொருள்களை விடுதலைப் புலிகள் பெற்றுள்ளனர்.

இவ்வாறு பாதுகாப்பு வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (எ)

## அடிக்கடி வந்து செல்லும் கப்பல்கள்

தென்மராட்சி, ஜூலை 29

வடமராட்சி கிழக்கில் வெற்றிலைக்கேணி முகாமை அண்டிய கடற்பகுதியில் மூன்று கடற்படைக் கப்பல்கள் அடிக்கடி வந்து தரித்து நின்று செல்கின்றன.

கடந்த பத்துத்தினங்களில் நான்கு தடவைகள் இக்கப்பல்கள் வந்து சென்றுள்ளன. நேற்றும் இக்கப்பல்கள் வெற்றிலைக்கேணிப் பகுதிக் கடலில் தரித்து நிற்கக் காணப்பட்டன. [இ-117]

# புலிகள் வருவதைபுரிந்து கொண்டதும் பொலீஸ், ராணுவம், ஓட்டம் பிடித்தன!

## அகப்பட்டுத் தப்பிய வைத்தியர் தகவல்

சாவகச்சேரி, ஜூலை 29

இராணுவத்தினரதும், பொலிஸாரினதும் காவலில் இருந்த எமக்கு, விடுதலைப் புலிகள் உள்ளே வந்துவிட்டார்கள் என்று தெரிந்ததும் பெரும் தெம்பு ஏற்பட்டது.

வித்தியாசமான குண்டுச் சத்தங்களைக் கொண்டே விடுதலைப்புலிகள் உள்ளே வருகிறார்கள் என்று அனுமானித்தோம்.

எங்களைப் போலவே குண்டுச் சத்தங்களைக் கேட்டு எமக்கு காவலாக நின்ற பொலிஸாரும், இராணுவத்தினரும் புலிகள் வருவதைத்தெரிந்துகொண்டு எங்களிடம் எதுவும் கூறாமலே ஓட்டம் பிடித்தார்கள்.

''முன்னேறிப் பாய்தல்'' நடவடிக்கையின் போது இராணுவத்திடம் அகப்பட்டு ''புலிப் பாய்ச்சல்'' தாக்குதலின் விளைவாகத் தப்பிய வைத்தியர் சுப்பிரமணியம் இவ்வாறு தெரிவித்தார்.

இராணுவத்திடம் அகப்பட்டு கவ்வளைப் பிள்ளையார் கோயிலில், அவர்களால் காவலில் வைக்கப்பட்ட சுமார் 150 பொதுமக்களில் இவரும் ஒருவராவார்.

வைத்தியர் சுப்பிரமணியம் (30 வயது) ஆலயத்தில் காவலில் இருந்த போது தமக்கு ஏற்பட்ட அனுபவத்தை உதயனுக்கு விவரித்தார். அவர் கூறியதாவது:

சிறுவர்கள், பெண்கள் உட்பட சுமார் 150பேர் ஆலயத்தில் தங்க வைக்கப்பட்டோம். பிள்ளையார் கோயில் வேட்டைத் திருவிழாவன்றே இராணுவ முற்றுகை இடம்பெற்றது. பிரதம குருக்களும் ஆலயத்தில் இருந்தார். இராணுவத்தினரின் அனுமதியுடன் தீர்த்தத் திருவிழாவன்று கொடி இறக்கப்பட்டது.

ஆலயத்தில் கொடி இறக்கிய அன்று அமைச்சர் ரத்வத்த கோயிலுக்கு வந்தார். பிரதம குருவிடம் பணம் கொடுத்து அர்ச்சனை செய்து தருமாறு கேட்டார். பிரதம குருவும் அர்ச்சனை செய்து அமைச்சருக்கும் காளாஞ்சி கொடுத்தார்.

மறுநாள் இன்னொரு அமைச்சர் வந்தார். நாம் அப்போது சமைத்துக் கொண்டிருந்தோம். அடுப்பங்கரைக்கு வந்த அவர், கிடாரத்தில் இருந்த அகப்பையை எடுத்துக் கறியைக் கிளறினார் கறியைக் கிளறிக் கொண்டே வீடியோ கமராவுக்கு சிரித்தவாறு போஸ் கொடுத்தார்.

நான்கு ஐந்து நாட்களாக ஒரே ஷெல், குண்டுச் சத்தங்களாகவே இருந்தது. துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களும் தொடர்ந்தன. அதனால் காது செவிடாகிவிட்டது போன்ற உணர்வே உண்டானது. குழந்தைகளின் நிலை மேலும் பரிதாபமாக இருந்தது.

ஆலயத்தில் இருந்த எமக்குப் பொலிஸாரும், இராணுவத்தினரும் காவலுக்கு நின்றனர். எனினும் இரவு நேரங்களில் நாம் 'புலிகளின் குரல்' செய்தியைக் கேட்ட போது அவர்கள் எதுவும் சொல்லவில்லை. — என்றார். (அ-31)


**பரத நாட்டிய அரங்கேற்றம்**

**செல்வி சிவானுஜா ஸ்ரீரங்கநாதன்**
(கொக்குவில் கலா பவன மாணவி)

இடம்: இளங் கலைஞர் கலா மண்டபம்
சட்டநாதர் வீதி நல்லூர்.

காலம்: 29 – 07 – 1995 (இன்று)
மாலை 4-30 மணி

உறவினர்கள், நண்பர்கள், கலாரசிகர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

திரு. ச. ஸ்ரீரங்கநாதன்
(ஆசிரிய ஆலோசகர் வேலணை),
திருமதி ஸ்ரீ. ஸ்ரீரங்கநாதன்
(ஆசிரியை யாழ். மத்திய கல்லூரி).

[37770]

யா/ஸ்கந்தவரோதய கல்லூரி
**க.பொ.த. (உ/த) பரீட்சை - 1995**
**அனுமதியட்டைகள்**

மேற்படி பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ள எமது கல்லூரியைச் சார்ந்த சகல மாணவர்களும் தமது அனுமதியட்டைகளை நாளை [30-7-95] ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு உடுவில் கோட்டக் கல்வி அலுவலகத்தில் தவறாது பெற்றுக்கொள்ளவும்.

ஆ. கமலநாதன்
[அதிபர்]

[சி/1966]

**தேடுதல்**

சுன்னாகத்தில் வசித்த
**பரமநாதன் தேவகுமார்**
குடும்பம் உடன் அவசரமாக வீட்டுக்கு வரவும்
– ஆறுமுகம் தம்பு
கல்வியங்காடு.
[37772]

**கண்ணீர் அஞ்சலி**

யாழ். பல்கலைக் கழக 1 ஆம் வருட விஞ்ஞான பீட மாணவன்
சோதிநாதனின் தந்தையார்
**நா. அம்பலவாணர்**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

1ம் வருட விஞ்ஞான பீட
மாணவர்கள்
யாழ். பல்கலைக் கழகம் [37773]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தத்தில் வெற்றிகள் மட்டுமன்றி தோல்விகளும் வெளியாக வேண்டும்

## "யுத்திய" ஆசிரியர் தலையங்கம்

கொழும்பு ஜுலை 29

"யுத்தம் தொடர்பான உண்மைநிலையை வெளியிட வேண்டும். வெற்றி பற்றிய செய்திகள் மாத்திரமல்ல தோல்விகள் பற்றிய செய்திகளும் வெளியிடப்பட வேண்டும். இதில் முக்கியமாகப் பொறுப்பேற்க வேண்டியது அரசும், அரச கட்டுப்பாட்டில் உள்ள தகவல் தொடர்பு சாதனங்களுமே ஆகும்— "யுத்திய" ஆசிரியர் தலையங்கத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த 15 ஆண்டுகளாக விரைவில் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவுள்ளோம் எனக் கூறுவதன் மூலம் நாட்டு மக்களின் கவனம் திசை திருப்பப்படுகிறது. இதனால் தன்னைத்தானே திருப்திப்படுத்துவதும் தற்காலிக ஆத்ம திருப்தி மட்டுமே ஏற்படுகிறது.

கடந்த 15 ஆண்டுகளாக அரசாங்கம் போர்ப் பொறியில் சிக்குவதும் பின்னர் அதிலிருந்து மீள சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதும் கண்கூடான உதாரணங்களாகும். இந்த நிலைமையில் மாற்றம் ஏற்படாவிடின் அரசியல் தீர்வை முன்வைப்பதால் எதுவித பயனும் ஏற்படாது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தை நாடு கடத்த வேண்டும் எனம் புதிதாகத் தேஷம் எழுப்பப்படுகிறது.

இதே செஞ்சிலுவைச் சங்கமே சமாதானப் பேச்சுக்களுக்கு பலமாதங்களாக முயற்சிகளை மேற்கொண்டது என்பதையும் போர்க் கைதிகளை விடுவிக்கும் முயற்சியில் தலையிட்டுப் பணியாற்றியதையும் நாம் மறந்து விடக்கூடாது.

யுத்தத்தின் உண்மை நிலைபற்றிப் பேச, எழுத முனைபவர்கள் "துரோகிகள்" எனக் குறியிடப்படுகிறார்கள். (ஒ-10)

## வாகரைப் பிரதேசத்துக்கு உணவுப் பொருள்கள்

### 3 லொறிகளில் அனுப்பப்பட்டன

வாழைச்சேனை, ஜுலை29

வாகரைப் பிரதேசத்துக்கு உணவுப் பொருள்களை கொண்டு செல்ல மட்டு மாவட்ட பாதுகாப்பு இணைப்பதிகாரி அனுமதி வழங்கியதை அடுத்து.—

கடந்த செவ்வாய்க்கிழமை மூன்று லொறிகளில் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் எடுத்துச்செல்லப்பட்டன.

செஞ்சிலுவைச் சங்கம் சர்வதேசக் குழுவின்வழித்துணையுடன் உணவு முத்திரைக்கான பொருட்களை ப. நோ. கூ. சங்கம் எடுத்துச் சென்றது.

வாகரைப் பிரதேசத்துக்கு உணவுப் பொருள்களை எடுத்துச் செல்ல படையினர் பல மாதங்களாக தடைசெய்திருந்தனர் என்பது தெரிந்ததே.

## தமிழ்க் கான்ஸ்டபிள் திருமலையில் சூட்டுக்கு பலி

திருகோணமலை பொலீஸ் புலனாய்வுப்பிரிவைச் சேர்ந்த பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர்கடந்த திங்கட்கிழமை நகரில் சிவன் கோயில் வீதியில் இனந்தெரியாதநபர் ஒருவரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார்.

மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இதனை அடுத்து தனது மோட்டார் சைக்கிளைவிட்டு விட்டு, சுமார் 150 யார் தூரம் வரை ஓடிச் சென்று, கனகம் மில்பொலீஸ் தடை முகாமில் அடைந்துள்ளார்.

அங்கிருந்து சிகிச்சைக்காக திருகோணமலை வைத்திய சாலைக்கு அனுப்பப்பட்டு, தீவிர சிகிச்சை எதுவும் பயனளிக்காதநிலையில் அன்றைய தினமே அவர் மரணமானார்.

32 வயதான சதாசிவம் புவனேந்திரன் என்றபொலீஸ் கான்ஸ்டபிளே இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டவர் ஆவார். [ஒ-எ]

## வடக்கு-கிழக்கு பிரச்சினை

## விரைவில் தீர்வு காணுமாறு ஜப்பான் அரசு கோருகிறது

கொழும்பு, ஜுலை 29

வடக்கு கிழக்குப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வினைக்காணுமாறு ஜப்பான் அரசு ஸ்ரீலங்கா அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த ஆண்டு ஸ்ரீலங்காவுக்கு அதிகளவிலான வெளிநாட்டு நிதி உதவியை அளிப்பது ஜப்பான் ஆகும்.

கடனும் உதவிகளும் சில நிபந்தனைகளின் அடிப்படையிலேயே ஸ்ரீலங்கா அரசுக்கு ஜப்பானால் வழங்கப்பட்டதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிப்பதாக "யுக்திய" பத்திரிகை தெரிவிக்கிறது. (ஒ-10)


## முறைசாராக்கல்வி

கற்கைநெறி:-

### மோட்டார் பொறியியல்

மேற்படி கற்கைநெறியை பயில விரும்புவோர் தமது விண்ணப்பங்களை சுயமாக தயாரித்து 05-08-95க்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அதிபர், கொக்குவில் இந்துக் கல்லூரி என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

— அதிபர்.

கொக்குவில் இந்துக்கல்லூரி,
கொக்குவில். [சி-1957]



## பிற்போடப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை

### சைவநெறித் தேர்வு - 95

நாட்டின் சீரற்ற நிலைமை காரணமாகவும், பாடசாலை அதிபர்களின் வேண்டுகோள்படியும் மேற்படி தேர்வுக்குரிய விண்ணப்ப இறுதிநாள் 15-09-95 வரை நீடிக்கப்பட்டுள்ளது. பரீட்சை 05-11-95இல் நடைபெறும்.

— சைவபரிபாலன சபை.

(37762)


## கடற்படையின் ரகசியங்கள் புலிகளுக்கு கிடைத்தனவா?

கொழும்பு, ஜுலை 29

மூன்றாவது ஈழ யுத்த ஆரம்பத்தில் விடுதலைப் புலிகளால் மூழ்கடிக்கப்பட்ட "சாகரவர்த்தன" கடற்படைக் கப்பலின் கப்டன் போயகொடவினால் கடற்படை தொடர்பான பெருமளவு தகவல்கள் விடுதலைப் புலிகளுக்கு கிடைத்துள்ளன என்று தெரிய வந்துள்ளது என "ஹிரு" பத்திரிகை தெரிவித்துள்ளது.

இந்தத் தகவல்களின் அடிப்படையிலேயே "எடித்தரா" கப்பலை விடுதலைப்புலிகளால் அழிக்க முடிந்தது. "சாகரவர்த்தன" கப்பலின் கப்டன் போயகொடவுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் வெளிநாடு ஒன்றில் தங்குவதற்கான ஒழுங்குகளை விடுதலைப்புலிகள் மேற்கொண்டு வருவதாக தேசிய புலனாய்வுப் பிரிவுக்குத் தகவல்கள் கிடைத்துள்ளனவாம்.

இத்தகவல்கள் பாதுகாப்புப் பிரிவினருக்குக் கிடைத்துள்ளதைத் தொடர்ந்து போயகொடவின் மனைவி வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் இதுவரை மனைவிக்கு வழங்கப்பட்ட போயகொடவின் சம்பளம் நிறுத்தப்பட்டுள்ளதாகவும் "ஹிரு" பத்திரிகை தெரிவித்துள்ளது.

## குருநாகல் பகுதிக்கும் புலிகளால் அச்சுறுத்தல்

### பொலீஸ் தரப்பு கூறுகிறது

கொழும்பு, ஜுலை 29

புத்தளம் மாவட்டத்துக்கு அருகில் உள்ள குருநாகல் மாவட்டத்திற்கும் புலிகளின் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என்று பொலீஸாரை மேற்கோள் காட்டி 'த ஐலண்ட்' செய்தி வெளியிட்டுள்ளது.

புத்தளம் மாவட்டத்தில் உள்ள இலவங்குளம் பாதுகாப்பு நிலை மீது விடுதலைப் புலிகள் கடந்த செவ்வாய்க்கிழமை தாக்குதல் நடத்தியதை அடுத்து இந்நிலை உருவாகியுள்ளதாக பொலீஸார் தெரிவித்தனர்.

புத்தளம் மாவட்ட பாதுகாப்பை உறுதி செய்யவே போதிய படையினர் இல்லாமல் இருப்பதாகவும் பொலீஸ் தரப்பில் கூறப்படுகிறது. [ஒ-3]

## மட்டக்களப்பில் சுற்றிவளைப்பு

கொழும்பு, ஜுலை 29

ஏறாவூரில் களுவங்கேணி, மாவடிவேம்பு, சித்தாண்டி போன்ற காட்டுப்பிரதேசங்கள் உட்பட ஏனைய கிராமங்கள் பலவும், படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு சோதனையிடப்பட்டன.

கடந்த ஞாயிறன்று அதிகாலை முதல் மாலை வரை இச் சுற்றிவளைப்புச் சோதனை இடம் பெற்றது.

இதன் போது 24வயது இளைஞர் ஒருவர், படையினரால் கைதுசெய்யப்பட்டு கொண்டு செல்லப்பட்டார்.

## கண்டியில் குண்டுகள் மீட்பு

கொழும்பு, ஜுலை 29

கண்டி, ஹரிஸ்பத்துவ தொகுதியில், கித்துல்கொல்ல கிராமத்தில் உள்ள வீடொன்றில் இருந்து பெரும் தொகையான வெடி குண்டுகள் கைப்பற்றப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது.

கைப்பற்றப்பட்ட வெடி குண்டுகள் அனைத்தும், பல்லேகல இராணுவ முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டு விசேட இராணுவத்தினரால் செயலிழக்கச் செய்யப்பட்டன. (ஒ)


## நன்றி நவிலல்

எங்கள் குடும்பத் தலைவி

### திருமதி பவளம் ஐயாத்துரை

அவர்கள் 11-07-1995 செவ்வாய்க்கிழமை அகாலமரணமாகிய செய்தி அறிந்து உடன் வந்து ஆறுதல் சொல்லி மரணச் சடங்கில் பங்குபற்றி பலவகைகளிலும் உதவிய உறவினர்கள், நண்பர்கள் மற்றும் யாழ். மாநகர ஆணையாளர், கணக்காளர், பொறியியலாளர்கள் மாநகர அலுவலக நண்பர்கள் செங்குந்தா இந்துக்கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், அலுவலர்கள், மாணவர்கள், அனுதாபச்செய்தி அனுப்பியோர் அனைவருக்கும் உள்ளம் கனிந்த நன்றிகள்.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்.

(பொ. பத்மராஜா, திரு. திருமதி சி. மகேந்திரன்)

பிரதான வீதி,
சுன்னாகம்... [illegible]னை. (37765)


## புலிகளின் குரல் வானொலியில்

29-07-1995

சனி இரவு

- ★ 8-02 — புரட்சிக்குரல்
- ★ 8-05 — சிறப்பு நிகழ்ச்சி —"ஒப்புக்குப்போதிய ஒப்பந்தம்"
- ★ 8-20 — நேயர் கடிதங்கள்
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — கவியரங்கம் — "தமிழீழம் பூமியில் தோன்றும்"

30-07-1995

ஞாயிறு காலை

- ★ 7-02—மாவீர வணக்கம்
- ★ 7-15—களத்தில் மலர்ந்தவை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-45 —களத்தில் மலர்ந்தவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலியில்

சனி மாலை

- ★ 5-01 — சிந்தனைச்சிதறல்
- ★ 5-02 — எழுச்சிகீதம்
- ★ 5-10 — புதியவை
- ★ 5-15 — வேங்கையின் நெஞ்சம்
- ★ 5-30 — அறிவியல் வினாடி வினா
- ★ 6-00 — சிந்தனைக்குச் சில விநாடிகள்
- ★ 6-02 — பாமாலை
- ★ 6-10 — செய்திகள்
- ★ 6-15 — என் தெரிவு

## வாலிபர் சடலமாக மீட்பு

வாழைச்சேனைக்கு அருகேயுள்ள பேத்தாழை கிராமத்தைச் சேர்ந்த சோ. நகுலேஸ்வரன் (20வயது) என்ற வாலிபர் கடந்த செவ்வாய்க்கிழமை காலை துப்பாக்கிச் சூட்டுக்கு காயங்களுடன் இறந்துகிடக்கக் காணப்பட்டார். [ஒ]

## கொழும்பில் மீண்டும் "ஜாக்பொட்"

கொழும்பு, ஜுலை 29

"ஜாக்பொட்" ஆட்டம் மீண்டும் கொழும்பு நகரில் தலைதூக்க ஆரம்பித்திருக்கிறது.

கடந்த அரசாங்க காலத்தில் பலரின் கண்டனங்களை அடுத்து "ஜெக்பொட்" இயந்திரங்கள் இரவோடு இரவாக கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடக்கு-கிழக்கு
மாகாணகல்வி கலாசார அலுவல்கள்
விளையாட்டுத்துறை அமைச்சு
திருகோணமலை

வடக்கு கிழக்கு மாகாண சபையின் கல்வி அமைச்சின் கீழ் உள்ள பாடசாலைகளில் உள்ள கல்விசாராத சிற்றூழியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கான

# விண்ணப்பங்கள் கோருதல்

வடக்கு – கிழக்கு மாகாண பாடசாலைகளில் உள்ள கீழ்க்காணும் வெற்றிடங்களை நிரப்புவதற்கான ஒவ்வொரு பதவிகளுக்கும் குறிப்பிட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள வடக்கு – கிழக்கு மாகாணத்தில் நிரந்தரமாக வசிக்கின்ற இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதன் கீழ் காட்டப்பட்டுள்ள விண்ணப்பப் படிவத்தில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் பூரணப்படுத்தி விண்ணப்பதாரி நிரந்தரமாக வசிக்கும் மாவட்டக் கல்விப் பணிப்பாளருக்கு பதிவு அஞ்சலில் 1995 – 08 – 11 ஆம் திகதியன்றோ அதற்கு முன்னரோ கிடைக்கும் வண்ணம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். ஒரு விண்ணப்பதாரி ஒன்றிற்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் பொழுது ஒவ்வொரு விண்ணப்பத்தையும் தனித்தனி கடித உறையில் அனுப்பி வைத்தல் வேண்டும். ஏற்கனவே அரச சேவையில் அமய, நிரந்தர, தொண்டர் அடிப்படையில் கடமைபுரியும்/புரிந்த விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை தாம் கடமை புரியும்/புரிந்த மாவட்டக் கல்விப்பணிப்பாளர் ஊடாக அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தை தாங்கி வரும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவி குறிக்கப்பட வேண்டும். 1995 – 08 – 11 ஆம் திகதிக்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

சம்பள அளவுத்திட்டம், கல்வித் தகைமைகள், பிற தகைமைகள் என்பன அவ்வப் பதவிகளுக்கு தரப்பட்டுள்ளன. விண்ணப்பதாரி நற்பழக்கமும் தேக ஆரோக்கியமும் உள்ளவராய் இருத்தல் வேண்டும்.

வடக்கு – கிழக்கு மாகாணத்தில் பிறந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்ட பின்னர் தொடர்ச்சியாக விண்ணப்ப முடிவு திகதிக்கு முன்னுள்ள ஆறு வருடங்களில் வடக்கு – கிழக்கு மாகாணத்தில் வசித்திருத்தல் வேண்டும். விண்ணப்பதாரியோ அல்லது அவரது தாய், தந்தையரோ சொல்லப்பட்ட மாகாணத்தில் அரசாங்க உள்ளூராட்சி அல்லது கூட்டுத்தாபனத்திலோ கடமை செய்பவராகவோ செய்திருந்தாலோ அல்லது பிறந்திருந்தாலோ தகுதியுள்ளவராகக் கருதப்படுவர்.

இப் பதவிகள் யாவும் நிரந்தரமானவையும் ஓய்வூதிய உரித்துடையவையுமாகும். வடக்கு – கிழக்கு மாகாணத்தில் எப்பகுதியிலாவது சேவை புரியக் கூடியவராக இருத்தல் வேண்டும்.

இந்நியமனம் மூன்று வருட தகுதிகாண் காலத்தைக் கொண்டதாகும். சேவையில் உறுதிப்படுத்தும் கடிதம் வழங்கும் வரை தகுதிகாண் காலம் நியமன அதிகாரியால் நீடிக்கப்படலாம். ஏற்கனவே சேவையில் உள்ளவர்கள் பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருந்த ஒரு வருட காலம் தகுதிகாண் காலமாக கருதப்படும். தாபனக் கோவை அத்தியாயம் பிரிவு 10.6 தொடக்கம் பொருத்தமானவையுமாகும்.

**வயதெல்லை:**

விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் ஏற்கனவே அரச மாகாண பொதுச் சேவையில் உள்ளவர்களுக்கு வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது ஆட்சேர்க்கும் முறை: அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 40/90 இற்கு அமையவே நியமனங்கள் செய்யப்படும்.

1. பதவிப் பெயர்: உதவி மேற்றன்
சம்பள அளவுத் திட்டம்: 25140/- 23 X 660 — 40320/- கல்வித் தகைமைகளும் பிற தகைமைகளும் – எண்கணிதம் / கணிதம், சிங்களம் / தமிழ், உடனலவியல் சார்ந்த உடற்கல்வியும் கொண்ட 3 பாடங்கள் உட்பட ஆறு பாடங்களில் சித்தி பெற்ற க.பொ.த. (சா/த) சித்தி விடுதி நிர்வாக அனுபவம்.
2. பதவிப் பெயர்: சமையற்காரர்
சம்பள அளவுத் திட்டம்: 25140 — 23 X 660 — 40320/– கல்வித் தகைமைகளும் பிற தகைமைகளும் – 8-ம் வகுப்பு சித்தி சமையல் அனுபவம் (பாடசாலை, பல்கலைக்கழகம் / பயிற்சிக் கலாசாலை)
3. பதவிப் பெயர்: ஆய்வுகூடப் பணியாளர்
சம்பள அளவுத் திட்டம்: 22440/- 20 X 480 — 32040/– கல்வித் தகைமைகளும் பிற தகைமைகளும்:- 8–ம் வகுப்பு சித்தி இரசாயன கூட அனுபவம்.
4. பதவிப் பெயர்: அலுவலக சேவைப் பணியாளர்
சம்பள அளவுத் திட்டம்: 22440/- 20X480—32040/- கல்வித் தகைமைகளும் பிற தகைமைகளும்; 8–ம் வகுப்பில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
5. பதவிப்பெயர்: சுகாதாரத் தொழிலாளி
சம்பள அளவுத் திட்டம்: 22440/-20X480—32040/- கல்வித் தகைமைகளும் பிற தகைமைகளும்: 8-ம் வகுப்பில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
6. பதவிப் பெயர்: நூல் நிலையப் பணியாளர்
சம்பள அளவுத் திட்டம்: 22440/- 20X 480—32040/- கல்வித் தகைமைகளும் பிற தகைமைகளும்: தே.பொ.க. அல்லது க. பொ. சா. புதிய பாடத்திட்டம் அல்லது சிரேஷ்ட பாடசாலை தராதரப் பத்திரம் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

ஒப்பம்:
க. தியாகராஜா
செயலாளர்
கல்வி கலாசார விளையாட்டுத்துறை அமைச்சு

கல்வி கலாசார விளையாட்டுத்துறை அமைச்சு
வடக்கு – கிழக்கு மாகாணம்
திருகோணமலை. (சி—1958)

# மாதிரி விண்ணப்பப் படிவம்

## வடக்கு கிழக்கு மாகாண சபையின் கல்வி அமைச்சின் கீழ் உள்ள பாடசாலைகளில் கல்விசாராத சிற்றூழியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கான விண்ணப்பம்

01. முதலெழுத்துக்களுடன் பெயர்; ..........................................
முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர்கள்;
..........................................

02. நிரந்தர முகவரி: ..........................................
..........................................

03. நிரந்தர வதிவிட மாவட்டம்:
1. அம்மாவட்டத்தில் விண்ணப்பக்காரர் வசிக்கத் தொடங்கிய திகதி;
..........................................
2. பிரதேச செயலாளரின் பகுதி: ..........................................

04. ஆணா/பெண்ணா; ..........................................

05. நீர் இலங்கைப் பிரஜையா?: ..........................................

06. இனத்தொகுதி: ..........................................
(சிங்களவர், இலங்கைத் தமிழர், முஸ்லிம், இந்தியத்தமிழர், மலாயா, பறங்கியர் ஏனையவர்)

07. தங்கள் குடும்பம் அசம்பாவித முயற்சிகளில் பாதிக்கப்பட்டதா? ஆம்/இல்லை
ஆம் எனில் பாதிக்கப்பட்டவருக்கும் விண்ணப்பதாரிக்கும் உள்ள உறவுமுறை:
..........................................

08. விண்ணப்பிக்கும் பதவியின் பெயர்:
8.1. ஏற்கனவே ஏதாவது பதவி வகித்தால்
அ] பதவியின் தன்மையும் பெயரும் ..........................................
ஆ. நியமனம் பெற்ற திகதி: ..........................................
இ] நியமனம் வழங்கிய அதிகாரியின் [பதவிப் பெயர்: ..........................................

09. தேசிய அடையாள அட்டை இல: ..........................................

10. 1) பிறந்த திகதி: ஆண்டு: .......... மாதம்; .......... திகதி: ..........
2) .......... அன்று வயது: ஆண்டுகள்! .......... மாதங்கள் .......... நாட்கள்: ..........

11. சித்தியடைந்த பரீட்சைகளின் விவரம், ..........................................
..........................................
1. தரம் / சித்தியடைந்த கடைசி ஆண்டு: ..........................................

12. சித்தியடைந்த ஏனைய பரீட்சைகளின் விவரம்
1. பரீட்சையின் பெயர்; ..........................................
2. பரீட்சை இடம்பெற்ற ஆண்டும் மாதமும்: ..........................................
3. சுட்டெண்: ..........................................
4. சித்தியடைந்த பாடங்கள்; ..........................................

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| .......... | .......... | .......... | .......... |
| .......... | .......... | .......... | .......... |
| .......... | .......... | .......... | .......... |
| .......... | .......... | .......... | .......... |

13. பிற தகைமைகள்: ..........................................

14. நீதிமன்று ஒன்றினால் எந்தவொரு குற்றச் சார்த்துகை பேரில் எப்போதாவது தண்டிக்கப்பட்டுள்ளீரா?; [ஆம் / இல்லை]
ஆம் ஆயின் விவரம் தரவும்: ..........................................

15. விண்ணப்பதாரியின் உறுதியுரை:
அ. மேலே கொடுக்கப்பட்ட விவரங்கள் யாவும் என் அறிவிக்கெட்டியவரை உண்மையானவையும், சரியானவையும் என உறுதிப்படுத்துகிறேன். விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் நியமனம் செய்வதற்கு முன் பிழையானதெனக் கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில் நான் தகுதியற்றவனாக படுவதுடன் நியமனம் கிடைத்த பின் கண்டு பிடிக்கப்பட்டால் வேலையில் இருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நன்கறிவேன்.

..........................................
திகதி: விண்ணப்பதாரரின் கையொப்பம்

16. ஏற்கெனவே சேவையில் உள்ளவராயின் திணைக்களத்தினரால் கொடுக்கப்பட வேண்டிய சான்றிதழ்:
இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் ..........................................
என்பவர் எமது திணைக்களத்தில் 19.......... திகதியிலிருந்து ..........
.......... ஆக கடமையாற்றினார் என உறுதிப்படுத்துகின்றேன்.

..........................................
முகவரி: .......... திணைக்களத் தலைவரின் பதவியும்
திகதி: .......... பெயரும் [பதவி முத்திரையுடன்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## சிவில் சித்திரவதை!

யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்கள் கடந்த இரண்டரை மாதங்களாக வெளிமாவட்டங்களிலும், வெளிநாடுகளிலும் உள்ள தமது குடும்ப அங்கத்தவர்கள், உறவினர்கள், நண்பர்களுடன் தொடர்பு கொள்ளமுடியவில்லை. பல அவசர, அவசிய தகவல்களைப் பரிமாறிக் கொள்ள முடியவில்லை.

வெளிமாவட்டங்கள் மற்றும் வெளிநாடுகளில் இருந்து யாழ்ப்பாணத்து மக்களுக்கு அனுப்பப்பட்ட கடிதங்கள் கடந்த இரண்டரை மாதங்களாக விநியோகிக்கப்படவில்லை. இக்கடிதங்கள் அடங்கிய ஆயிரத்துக்கும் அதிகமான பொதிகள் சோதனைக்கென்று படையினரால் கொழும்பில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

1990 ஜூன் மாதத்தில் ஈழப்போர் இரண்டு தொடங்கியதிலிருந்து, இவ்வாறு பல தடவைகள் — அடிக்கடி — தமிழ் மக்களின் குடும்பத் தகவல்கள் மற்றும் முக்கிய தகவல்களைப் பரிமாறிக் கொள்ளும் உரிமையை ஸ்ரீலங்கா அரசுகள் பறித்து வருகின்றன.

மக்கள் தமக்கிடையே தகவல்களைப் பரிமாறிக்கொள்வது மனித அடிப்படை உரிமைகளில் ஒன்று. அந்த உரிமையைப் பறிப்பது பெரும் அடிப்படை உரிமை மீறலாகும். அது மட்டுமன்றி மிக முக்கியமான குடும்பத் தகவல்களை பரிமாற விடாது தடுப்பது மனச் சித்திரவதையுமாகும்.

தகவல்கள் உரிய நேரத்தில் கிடைக்காவிடில், பிந்துவதால், கடிதங்கள் பயனற்றவையாகிப் போகின்றன. அந்தத் தாமதம் தனிப்பட்டோர் வாழ்க்கையில் பெரும் பாதிப்புகளை உண்டாக்கி, மனத்தாக்கத்தை ஏற்படுத்தி நாளாந்த வாழ்க்கையையே சுக்கு நூறாக்கியும் விடுகிறது.

மனித உரிமைகளைப் பேணுவதில் பெரும் அக்கறை உள்ளதாகக் காட்டிக் கொள்ளும் சந்திரிகா அரசுகூட, யாழ்ப்பாண மக்களுக்குரிய தபால்களைத் தடுத்து வைத்து அவர்களை மனச் சித்திரவதை செய்தும், அடிப்படை உரிமைகளை மீறியும் அக்கிரமம் செய்கிறது!

மனித உரிமைக் குழுக்கள் இது விடயத்தைக் கவனத்தில் கொண்டு, அநியாயத்தை நிறுத்துமாறு அரசை வலியுறுத்த வேண்டும். இந்தச் சித்திரவதையையும், மனித உரிமை மீறலையும் ஆட்சேபித்து அடிப்படை உரிமை மீறல் வழக்குத் தாக்கல் செய்வதன் மூலம் அரசின் அநியாயத்தை அம்பலப்படுத்தலாம்.

போருக்கும், சாதாரண தமிழ் மகனுக்கு அவனது குடும்ப உறுப்பினர், அனுப்பும் கடிதத்துக்கும் என்ன தொடர்பு? அவனது குடும்ப இரகசியத்தை அறியும் உரிமையை அரசுக்கு கொடுத்தது யார்? கடிதத்தை சோதித்து அதில் புலனாய்வு செய்வதற்கு எந்தச் சட்டமும் இடம் தரவில்லை.

மொத்தத்தில், இராணுவ ரீதியில் தமிழர்களைச் சித்திரவதை செய்வதோடு மட்டுமன்றி, அரசு சிவில் ரீதியாகவும் இத்தகைய சித்திரவதைகளைப் புரிகிறது. தமிழர்கள் உரிமைகளைக் கேட்கிறார்கள் என்பதற்காக அவர்களை இராணுவ ரீதியாகவும் சிவில் ரீதியாகவும்சித்திரவதை செய்வது தான் அரசின் பழிவாங்கலாகும்!

# முப்படைகள் மற்றும் பொலிஸாருக்கு மேலும் ரூபா 462 கோடி ஒதுக்கீடு

## நாடாளுமன்றில் அவசர குறை நிரப்பு பிரேரணை

கொழும்பு, ஜூலை 29

முப்படை, மற்றும் பொலிஸாருக்கென மேலும் 462 கோடி ரூபா நிதிகோரி, அவசர குறை நிரப்புப் பிரேரணை ஒன்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த அவசர குறை நிரப்புப் பிரேரணையை நீர்ப்பாசன, மின்சக்தி அமைச்சரும், பிரதி பாதுகாப்பு அமைச்சருமான கேணல் அனுருத்த ரத்வத்த சமர்ப்பித்தார்.

தரைப்படைக்கு 255 கோடி ரூபாவும், கடற்படைக்கு 152 கோடி ரூபாவும், விமானப் படைக்கு 25 கோடி ரூபாவும், பொலீஸ் படைக்கு 30 கோடி ரூபாவும் தேவைப்படுவதாக அப் பிரேரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

1995 ஜனவரி 1ஆம் திகதி முதல் இதே ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடியும் நிதியாண்டில் —

நாட்டின் திரட்டு நிதியில் இருந்தோ அல்லது, அரசினதோ, அரசு பயன்படுத்தக் கூடிய நிதியில் இருந்தோ, அல்லது பணத்தில்இருந்தோ, அல்லது, அரசு பெற்றுள்ள எந்தவொரு கடன் வருமானத்திலும் இருந்தோ 255 கோடி ரூபா குறை நிரப்பும் தொகை ஒன்று வழங்கப்பட வேண்டும் — என்று தரைப் படையினருக்கான நிதி கோரும் பிரேரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அது போலவே ஏனைய படையினருக்கும் தனித் தனியான,நிதிகோரும் பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ள குறை நிரப்புப் பிரேரணை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 8 ஆம் திகதிக்கான நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் இடம் பெற்றுள்ளது.

ரத்வத்தை, அன்றைய தினம், இக்குறை நிரப்பு பிரேரணையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து, அங்கீகாரம் கோருவார். (எ)

## தேர்வு பணியாளர் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 29

நாளை மறுதினம் ஆரம்பமாகவுள்ள ஜி.சி.ஈ உயர்தரப் பரீட்சையின் தேர்வுப் பணியாளர்களுக்கான கூட்டம் இன்று சனி பிற்பகல் 2 மணிக்கு நல்லூர் சாதனா பாடசாலையில் நடைபெறவுள்ளது.

சகல தேர்வுப் பணியாளர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கல்விப்பணிப் பாளர்கள் அறிவித்துள்ளனர்.

## மாணவியை சைக்கிளில் ஏற்றிய பெண்கள்!

### கைப்பையிலிருந்த பணம் அபேஸ்!!

தென்மராட்சி, ஜூலை 29

பாடசாலை வாசலில் நின்ற மாணவி ஒருவரை தமது சைக்கிளில் மாறி, மாறி "டபிள்" ஏற்றிச் சென்ற பெண் ஊழியர்கள் இருவர் தமது கைப்பைக்குள் இருந்த பணத்தைப் பறிகொடுத்தனர்.

இச்சம்பவம் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

சாவகச்சேரியில் உள்ள ஒரு பாடசாலை வாசலில் பஸ்ஸுக்கு காத்து நின்ற பிரஸ்தாப மாணவியை அவ் வழியால் வந்த பெண்கள் இருவர், சாவகச்சேரியில் இருந்து மீசாலை வரை ஒருவரும் மீசாலையில் இருந்து புத்தூர் சந்தி வரை மற்றவரும் ஏற்றிச் சென்றனராம்.

இந்தப் பெண் ஊழியர்கள் இருவரும் வீட்டுக்குச் சென்று பார்த்தபோது இவர்களது கைப்பையில் இருந்த பணம் காணாமற்போய் இருந்தது.

பிரஸ்தாப மாணவியை சைக்கிளில் "டபிள்" ஏற்றும்போது கைப்பையை வைத்திருக்கும்படி இவர்கள் அம் மாணவியிடம் கொடுத்திருந்தனராம்.

மறுநாள் பிரஸ்தாப மாணவி கல்வி பயிலும் பாடசாலை அதிபரிடம் அப்பெண்கள் முறையிட்டனர். அதிபர் நடத்திய விசாரணையை அடுத்து ஒரு பெண்ணின் கைப்பையில் இருந்து எடுக்கப்பட்ட 500 ரூபா பணம் மீட்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

[இ-117]

## வரணியில் 250 ஏக்கரில் தற்காலிக முகாம்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 29

'முன்னேறிப் பாய்தல்' இராணுவ நடவடிக்கையினால் ஏற்கனவே இடம்பெயர்ந்து முகாம்களில் இருந்து மீள இடம் பெயர்ந்தவர்களை வரணிப்பகுதியில் 250 ஏக்கர் நிலப்பரப்பில் தற்காலிக முகாம் அமைத்து குடியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இடம்பெயர்ந்தோரின் தற்போதைய நிலைமை தொடர்பாக ஆராய நேற்று யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் இது பற்றித் தீர்மானிக்கப்பட்டது.

இந்த இராணுவ நடவடிக்கையினால் தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவு, சண்டிலிப்பாயில் 5 கிராம சேவையாளர் பகுதியிலும்—

சங்கானையில் 3 கிராம சேவையாளர் பகுதியிலும் மக்கள் முற்றாக இடம் பெயர்ந்து உறவினர் வீடுகளிலும் முகாம்களிலும் இருக்கிறார்கள்

இவர்களில் ஏற்கனவே இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியிருந்து மீள இடம் பெயர்ந்தவர்களை முன்னுரிமை கொடுத்து வரணிப் பகுதியில் குடியேற்றுவதற்கு அரசசார் பற்ற நிறுவனங்களின் உதவியுடன் யாழ். அரச அதிபர் நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

[இ-4]

## புலிகளால் தகர்க்கப்பட்ட கப்பல்களின் சிதைவுகளால் துறைமுகத்தில் இடைஞ்சல்

கடந்த 15 ஆம் திகதி காலை கடற்புலிகளால் அதிரடித் தாக்குதல் மூலம் தகர்க்கப்பட்ட "எடித்தரா" கப்பலினதும் —

கடந்த ஆகஸ்ட் 15 ஆம் திகதி பொதுத் தேர்தல் சமயம் துறைமுகத்துக்குள் புகுந்து கடற்புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் தகர்க்கப்பட்ட "ஏ-516" கப்பலினதும் —

சிதைவுகள் காங்கேசன் துறைமுகத்துக்குள் அமிழ்ந்து கிடப்பதால் துறைமுகத்துக்குள் கப்பல் போக்குவரத்துக்கு பெரும் இடைஞ்சலும் நெருக்கடியும் ஏற்பட்டிருப்பதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

பொருள்களுடன் வந்த ஆயிரம் தொன் கப்பலான "ஓஷன் கரியர்" ஒருவாறு சமாளித்துக் கொண்டு காங்கேசன் துறைமுகத்துக்குள் நுழைந்து பொருள்களை இறக்குவதாகவும் —

ஆனால் 2500 தொன் எடை கொண்ட "லங்கா முதித" கப்பல் துறைமுகத்துக்குள் நுழைய முடியாத நிலையில் காங்கேசன்துறை முகத்துக்கு வெளியே தரித்து நின்று "பாஜ்கள்" மூலம் படையினருக்கான பொருள்களை இறக்குவதாகவும் —

கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. (உ)

## புலிகளுக்கு ஆதரவாக தமிழ் நாட்டில் பிரசாரம்

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு தேடி தமிழ்நாட்டில் கரையோரப் பகுதிகளில் பிரசாரக் கூட்டங்கள் தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்த் தேசியவாதியான பி. நெடுமாறன், பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் எம். ராமதாஸ் ஆகியோரே இக்கூட்டங்களை நடத்தி வருகிறார்கள்.

"புதுடில்லி கொழும்பை ஆதரிக்குமானால் தமிழ் நாட்டில் புதுடில்லி புரட்சி ஒன்றை எதிர்நோக்கும்" என்று கூறும் சுலோகங்களை கூட்டங்களில் மக்கள் கோஷமிட்டனர்.

இலங்கைக்கு இந்தியா ஆதரவளித்தால் சுதந்திரமான தமிழ்நாடு ஒன்றை கோரப்போவதாக டாக்டர் ராமதாஸ் கூட்டங்களில் கூறிவருகிறார். (ஓ-3)

# நோயாளர் கப்பல் சேவை மீண்டும் ஆரம்பிக்க முயற்சி

யாழ்ப்பாணம், ஜூலை 29

திருகோணமலைக்கும் பருத்தித்துறைக்கும் இடையில் நோயாளர் கப்பல் சேவையை மீண்டும் நடத்த செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

நோயாளர் கப்பல் சேவையை நடத்த செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு வாடகைக்கு அமர்த்தியிருந்த "சீடான்ஸர்" கப்பல் காங்கேசன்துறையில் கண்ணியில் சிக்கி மூழ்கியதையடுத்து நோயாளர் கப்பல் சேவை நிறுத்தப்பட்டிருப்பது தெரிந்ததே.

நோயாளர் கப்பல் சேவையை மீண்டும் நடத்தவும் —

மனிதாபிமான அடிப்படையான பொருள்களை [illegible] நாட்டில் உள்ள அரசசார்பற்ற அமைப்புகளுக்கு எடுத்து வரவும் — கப்பல் சேவை ஒன்றை நடத்த செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு ஏற்பாடுகள் செய்துள்ளது.

'ஹயரண' கப்பலின் ஒரு குறிப்பிட்ட அளவு பகுதியை பெற்று இந்த சேவையை நடத்தும் நோக்குடன் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு மேர்கண்டைல் கப்பல் கம்பனியுடன் பேச்சுக்கள் நடத்திவருவதாக தெரிவிக்கப்பட்டது.

[இ-3]

## தமிழக பத்திரிகைகளில் புலிகளுக்கு முக்கியத்துவம்

கடந்த இரு வருடங்களுக்கு பின் தமிழக பத்திரிகைகள் விடுதலைப் புலிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கத் தொடங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப்புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரனின் புகைப்படம் தினத்தந்தியின் முன்பக்கத்தில் வெளியிடப்பட்டது என்றும்—

"முன்னேறிப் பாய்தல்" நடவடிக்கைக்கு எதிராக புலிகள் மேற்கொண்ட "புலிப்பாய்ச்சல்" நடவடிக்கைவெற்றி குறித்த புலிகளின் அறிக்கை தினத்தந்தியின் மதுரை திருச்சி பதிப்புக்களின் முக்கிய இடம் அளித்து பிரசுரிக்கப்பட்டதாக [illegible]

இ[illegible]களின் பத்திரிகைகள் விடுதலைப் புலிகளின் செய்திகளுக்கு முக்கிய இடம் அளித்துவருகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டது. [ஓ-3]

## விளையாட்டு நிகழ்வு

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு — வலிகிழக்கு உதைபந்தாட்ட சங்கத்தில் இணைந்துள்ள கழகங்களுக்கிடையே நடத்தும்— விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி இன்று ஆரம்பமாகவுள்ளது.

யாழ். மருத்துவ பீட மைதானத்தில் இன்று நடைபெறும் ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

★ பிற்பகல் 3. 30 மணி — பாரதி அணி எதிர் ஈச்சமோட்டை அணி.

★ பிற்பகல் 4. 30 மணி— "யங்" ஸ்ரார் எதிர் அறிவொளி. (ஐ)

## பிராங்டி சில்வா

பொலீஸ் மா அதிபராகக் கடமையாற்றி வந்த பிராங்டி சில்வா நேற்றுடன் பதவியில் இருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

புதிய பொலீஸ் மா அதிபராக பிரதிப் பொலீஸ் மா அதிபராக இருந்த ராஜகுரு பதவியேற்கவுள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2 வாரங்களுக்கு போதுமான உணவே தற்போது கையிருப்பில்

## அரச அதிபர் ஜனாதிபதிக்கு நேற்று அவசர தகவல்

யாழ்ப்பாணம், ஜூலை 29 யாழ். மாவட்டத்தில் தற்போது நிலவிவரும் உணவுப் பற்றாக்குறை மேலும் மோசமடையும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இங்குள்ள மக்களுக்கு 2 வாரங்களுக்கு மட்டும் போதுமான உணவுக் கையிருப்பே தற்போது இருப்பதாக யாழ். அரச அதிபர் திரு. கே. பொன்னம்பலம் நேற்று மாலை யாழ். செயலகத்தில் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழுவின் பாதுகாப்பில் வந்த "லங்கா முடித" கப்பலில் இருந்து, காங்கேசன்துறையில் வைத்து, படையினர் உணவுப் பொருள்களை இறக்கியதை அடுத்து செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு வடபகுதிக்கு வரும் கப்பல்களுக்கான பாதுகாப்பை இடைநிறுத்தி உள்ளது தெரிந்ததே.

இதனால் யாழ். குடாநாட்டுக்கு உணவுக் கப்பல்கள் வரமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலைமை குறித்து நேற்று பிற்பகல் செஞ்சிலுவை சங்க சர்வதேசக் குழுவின் யாழ். வதிவிடப் பிரதிநிதியுடன் யாழ். அரச அதிபர் மற்றும் உயரதிகாரிகள் தீவிரமாக ஆராய்ந்தனர்.

அதன் பின்னர் நேற்று மாலை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு ஊடாக அரச அதிபர் அவசர செய்தி ஒன்றை ஜனாதிபதி, புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர், மற்றும் புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் ஆகியோருக்கு அனுப்பி வைத்தார்.

கப்பல்களுக்கான பாதுகாப்பை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு இடைநிறுத்தியுள்ளதனால் யாழ். மாவட்ட உணவுநிலைமை மோசமடைந்துள்ளது. செஞ்சிலுவைச் சங்கத்தின் பாதுகாப்பில் கப்பல்கள் வராவிடில் பொருள்களை கப்பலில் இருந்து இறக்குவது கஷ்டமானவிடயம்.

இதனால் செஞ்சிலுவைச் சங்கத்தின் பாதுகாப்புடன் மாதாந்தம் யாழ் மாவட்டத்திற்கு கப்பல்களில் வந்து சேரும் 9 ஆயிரம் மெற்றிக் தொன் உணவுப் பொருள்களை அனுப்பி வைக்க உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு அச்செய்தியில் கோரப்பட்டுள்ளது. (இ-4)

## மரண அறிவித்தல்கள்

### இராயப்பு அருளானந்தம் [இரத்தினம்]

வசாவிளானைப் பிறப்பிடமாகவும், நோர்வேயை வசிப்பிடமாகவும் கொண்ட இராயப்பு அருளானந்தம் (இரத்தினம்) 26 - 07 - 1995 இல் நோர்வேயில் காலமானார்.

இவர் காலஞ் சென்ற இராயப்பு மரியம்மாவின் அன்பு மகனும், மாக்கிறேற்றின் (நோர்வே) அன்புக் கணவரும், ஜெகன், றூபன், சுதர்சன் (நோர்வே), ஆகியோரின் அன்புத் தந்தையும், லூக்காஸ், காலஞ் சென்ற தங்கம் ஆகியோரின் அன்பு மருமகனும், பாலசுந்தரம் (ஜேர்மனி), யோகம்மா, நேசமணி (சுவிஸ்) ஜெகதாசன் (உதயன் பணிமனை], டேவிற் (ஜேர்மனி] றீற்றா [சுவிஸ்], வசந்தி [நோர்வே] ஆகியோரின் அன்புச் சகோதரனும், ஆரோக்கியநாதர், ஞானமலர் ஜோண்சன் றோசி [சுவிஸ்], மரியகொறற்றி, ஜெபரட்ணம் (சுவிஸ்], காந்தராஜா [நோர்வே], அனுசியா, பூமணி [டென்மார்க்], சின்னம்மா, ஆபேல் (நோர்வே], பெரியதம்பி [சுவிஸ்), கறுவண்டு [சுவிஸ்] அமலன் [சுவிஸ்], ராணி [டென்மார்க்], குஞ்சு [டென்மார்க்] ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் நோர்வேயில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

திரு. இ. ஜெகதாசன் (சகோதரர்)

திரு. சூ ஆரோக்கியநாதர் (மைத்துனர்)

52, இராசாவின் தோட்டம்

யாழ்ப்பாணம்.

[சி-1962)

### நாகமுத்து அம்பலவாணர் (வர்த்தகர் - வவுனியா)

காரைநகர் முல்லைப்புலவைப் பிறப்பிடமாகவும் 352, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணத்தில் வசித்தவருமான நாகமுத்து அம்பலவாணர் நேற்றுக் காலமானார்.

இவர் காலஞ்சென்ற நாகமுத்து தெய்வானைப் பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், பூமணியின் அன்புக் கணவரும், சிவகாமசுந்தரி, சோதிநாதன் (1 ஆம் வருட விஞ்ஞானபீடம் யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவபாக்கியம், தங்கமுத்து, காலஞ்சென்ற திருநாவுக்கரசு ஆகியோரின் அன்புச் சகோதரரும், இரத்தினம், கமலாதேவி, காலஞ்சென்ற சரஸ்வதி, மற்றும் சதாசிவம் [ஜேர்மனி], கணேசன் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் நேற்று கோம்பயன் மணல்மயானத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

அ. சோதிநாதன் [மகன்]

(37774)

### திருமதி நல்லம்மா ஆறுமுகம்

வண்ணார்பண்ணை நாச்சிமார் கோவிலடியைப் பிறப்பிடமாகக் கொண்ட. திருமதி நல்லம்மா ஆறுமுகம் நேற்று சிவபதமடைந்துவிட்டார்.

இவர் சிவபதம் அடைந்த இராமலிங்கம் ஆறுமுகம் (சுங்க இலாகாப் பகுதி கொழும்பு - இளைப்பாறிய பிரதம உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும், ஜெயகுமார் (General Manager Voltamp International Ltd, Colombo) அவர்களின் பாசமிகு தாயாரும், அருந்ததியின் அன்பு மாமியாரும், பிரதீபன், கிருஷாந்தன் ஆகியோரின் அன்பு அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்லை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

செல்வி மலர் இராமலிங்கம் [மைத்துனி) (இலிகிதர், காங்கேசன் சிமெந்து தொழிற்சாலை]

619, கே. கே. எஸ். றோட்,

நாச்சிமார் கோவிலடி,

யாழ்ப்பாணம்.

(37775]

### 25 ஆயிரம்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டும் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்து விடலாமென படையினர் தரப்பு நம்புவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### புலிகளைத்....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

போராடும் விடுதலைப் புலிகளை தோற்கடிக்கச் செய்து நாட்டைப் பாதுகாப்பதற்காக ஆரம்பிக்கப்பட்டுள்ள யுத்தத்தில் அரசு தனது முழு கவனத்தையும், முழுப் பலத்தையும் செலுத்த வேண்டும் என்று அந்த மகஜரில் கோரப்பட்டுள்ளது.

போர் தீவிரமடைந்துள்ள நிலையில் சமாதானத் தீர்வுத் திட்டத்துக்கான அரசமைப்புச் சீர்திருத்தம் பற்றிக் கலந்துரையாடுவதற்கான அரசியல் சூழ்நிலை நாட்டில் நிலவவில்லை என்றும் அந்த மகஜரில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

### பச்சிலைப்பள்ளி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இரு ஷெல்களினால் கம்மாலை ஒன்று சேதத்திற்குள்ளானது. இரவு தரிப்புக்கு பஸ் நிலையத்தில் நிறுத்தப்பட்டிருந்த தட்டிவான் சில்லுகள் ஷெல் சிதறல்களால் சேதமடைந்தன. தட்டிவானுக்குள் இருவர் படுத்திருந்த போதிலும் உயிர் தப்பினர். ஷெல் சிதறல்கள் நகரப் பகுதியில் உள்ள கடைகளுக்கும் சேதம் ஏற்படுத்தின.

அல்லிப்பளையில் உள்ள தென்னந்தோட்டத்திலும். கிளாலி எழுதுமட்டுவாள் வீதியில் உள்ள ஐயனார் கோவிலுக்கு அண்மையிலும் மிருசுவில் காம்பரம் வயலிலும், மாசார் ... பற்றைக் காடுகளிலும் ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன.

(இ-117)

## மட்டக்களப்பு மாவட்டத்தில்

# 40 அரச வங்கிகளுக்கு கடும் பாதுகாப்பு ஏற்பாடு

மட்டக்களப்பு மாவட்டத்தில் இலங்கை வங்கி, மக்கள் வங்கி போன்ற அரச வங்கிகளுக்கு பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

அதே சமயம் ஏறாவூர் பொலிஸ் பிரிவில் கன்னன்குடாவில் வசிக்கும் முஸ்லிம் வர்த்தகர் ஒருவரின் வீட்டினுள் புகுந்த இனந் தெரியாத கோஷ்டி ஒன்று அங்கிருந்த நகைகள் மற்றும் பணம் ஆகியவற்றைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளது.

இக் கொள்ளைக் கோஷ்டியினர் முகத்தை கறுப்புத் துணியால் மூடியிருந்ததாகவும், ரி 56 ரகத் துப்பாக்கி உட்பட வேறு ரகத் துப்பாக்கிகளையும் வைத்திருந்ததாகவும், கைகளுக்கு கையுறைகளை அணிந்திருந்ததாகவும் தெரியவந்தது.

## செஞ்சிலுவை கல்வி நிலையம்

அனர்த்தங்களின் நிமித்தம் கடந்த இரண்டு வாரங்களாக இயங்காதிருந்த இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளையினது கல்வி நிலையம் தற்போது சுமுகமாக இயங்கி வருகிறது. அங்கு கல்வி கற்கும் மாணவர்களை உடனடியாக கல்வி நிலையம் வந்து கல்வியைத் தொடருமாறு கோரப்பட்டுள்ளது.

### செஞ்சிலுவைப்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தாள்களுடன் வரவுள்ள "ஹபரண" கப்பலுக்கு மட்டும் தமது பாதுகாப்பை வழங்க செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு முன்வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் பாதுகாப்புடன் காங்கேசன்துறையில் தரித்து நின்ற "லங்கா முடித" கப்பலில் இருந்து கடந்த செவ்வாயன்று ஒரு தொகுதி உணவுப் பொருள்களை படையினர் இறக்கியதை அடுத்து செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு அக்கப்பலுக்கு வழங்கிய பாதுகாப்பை விலக்கிக் கொண்டது.

வடக்கே வரும் கப்பல்களுக்கு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு பாதுகாப்பு வழங்கும் தற்போதைய நடைமுறை தொடர்பான உடன்படிக்கை மீளாய்வு செய்யப்பட்டு முத்தரப்பு ஒப்பந்தம் ஒன்று ஏற்பட்ட பின்னரே கப்பல்களுக்கு பாதுகாப்பு வழங்கும் நடைமுறை மீண்டும் அமுலுக்கு வரலாம் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-3-4)

### மணலாறில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஐம்பதுக்கு மேற்பட்ட வேங்கைகள் வீரச்சாவடைந்துள்ளனர்.

கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த மணலாறுப் பகுதியில் பலத்த பாதுகாப்பின் மத்தியில் அமைந்திருந்த முகாம்களே புலிகளின் திடீர் தாக்குதலுக்கு இலக்காகின.

தாக்குதலை அடுத்து கடும் சண்டை மூண்டதும் விமானப்படையினரும் கடற்படையினரும் அப்பகுதிகளுக்கு விரைந்து எதிர்த் தாக்குதலை ஆரம்பித்ததாக படையினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

குண்டு வீச்சு விமானங்கள் ஹெலிக்கொப்டர்களின் அகோர தாக்குதல்களின் மத்தியில் விடுதலைப் புலிகள் முகாம்களை நோக்கி முன்னேறிக் கடும் சமர் புரிந்தனர்.

ஹெலிக்கொப்டர் ஒன்றை நோக்கி புலிகள் ஏவுகணையைச் செலுத்திய தாகவும் ஆனால் விமானியின் சாதுரியத்தால் ஹெலி தப்பிவிட்டதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

இத்தாக்குதலில் 14 படையினர் கொல்லப்பட்டு, 20 படையினர் வரை காயமடைந்ததாக கொழும்பில் இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

எனினும் படையினர் தரப்பில் பலத்த உயிர்ச் சேதம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதல் நடந்த பகுதிகளில் தொடர்ந்து சண்டை நடைபெறுவதாக நேற்றிரவு தெரிவிக்கப்பட்டது ஆயினும் தாக்குதலில் ஏற்பட்ட சேத விவரங்கள் தொடர்பான மேலதிக தகவல்கள் இச் செய்தி அச்சுக்குப் போகும் வரை கிடைக்கவில்லை.

இதற்கிடையில் —

இத் தாக்குதலில் வீரச்சாவடைந்த போராளிகளின் உடல்களை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு ஊடாக கையளிக்க அரசு நடவடிக்கை எடுத்துவருவதாக தெரிவிக்கப்பட்டது. (ஐ]

### கைவிடப்பட்ட...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அனைவரும் அடைக்கப்பட்டிருந்தனர்.

இவர்களை கண்டுபிடித்த அதிகாரிகள் பின்னர் அவர்களை செச்னிச்சில் உள்ள தஞ்சம் வழங்கும் நிலையத்துக்கு கொண்டு சென்றனர்.

சம்பந்தப்பட்ட "டிரக்" வண்டியின் சாரதி தலைமறைவாகி விட்டார் எனப் பொலீஸார் தெரிவித்தனர்.

அண்மையில் ஹங்கேரியில் "டிரக்" இழுவை வண்டி ஒன்றினுள் மூச்சுத் திணறி உயிரிழந்த 18 இலங்கையர்கள் சடலங்களாக மீட்கப்பட்டது தெரிந்ததே. [ஐ-4]


## யாழ். றோட்டறி பதவியேற்பு நிகழ்வு (Instalation Ceremony)

யாழ். றோட்டறி கழகம் தனது 55 ஆவது வருடத்திற்கான உத்தியோகத்தர்களினது பதவியேற்பு நிகழ்வு நாளை ஞாயிறு 30 - 07 - 95 பிற்பகல் 4. 30 மணிக்கு யாழ். ஞானம்ஸ் ஹோட்டலில் நடத்தவுள்ளது.

இந்நிகழ்வில் றோட்டறக்ட் கழக தலைவர், செயலாளர், இன்ரறக்ட் கழக தலைவர், செயலாளர் ஆகியோரை கலந்துகொண்டு நிகழ்ச்சியை சிறப்பிக்குமாறு வேண்டுகிறேன்.

Rtn. PHSM க. கேசவன்

தலைவர்

யாழ் றோட்டறி கழகம்

128, யமுனா வீதி,

நல்லூர்,

யாழ்ப்பாணம்.

(சி/1965)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 29 - 07 - 1995 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org